**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**O.S.No. 38/2017**

| | | |
|---|---|---|
| **வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி** | **:** | வா.சா.2 |
| பெயர் | : | நடராஜன் |
| தகப்பனார் பெயர் | : | முனியசாமி |
| தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | வக்கணக்கோட்டை |
| தாலுகா | : | தேவகோட்டை |

2025ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்ச் கிளார்க் திரு.மாஆ.மணியரசன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் 3ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமாக நிருபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு இல்லை.